# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஜூன் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 29.06.2018–ந் தேதி மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ந.க.எண்.12981/2018/இ3 நாள்.27.06.2018–ன் படி இந்நகர் பகுதியில் பழுதான சேதமடைந்த முக்கிய சாலைகளை சீரமைப்பு செய்யும் பொருட்டு சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2018-19 (TURIP)** கீழ் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு, (TURIP மானியம்: 1.38 இலட்சம் + மாநில நிதிகுழு/மத்திய நிதிகுழு மானியம்: 0.90 இலட்சம் + மாநில நிதிகுழு மானிய ஊக்க நிதி: 0.42 இலட்சம் + நகராட்சி பங்களிப்பு: 0.30 இலட்சம்) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரும் பொருட்டு, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ)லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | **சிப்பம்–1 (Package-I)**<br>வார்டு எண்.2 அன்னா நகர் முன்று குறுக்கு தெருக்கள்,முத்துசாமிபுரம் இரண்டு குறுக்கு தெருகள், வார்டு எண்.3 பெத்திரி தெரு பகுதிகள், பட்டானிஅப்பா முன்று குறுக்கு தெருக்கள், வார்டு எண்.6 வள்ளல் சீதக்காதி சாலை(ஹீசைனியா மஹால்) முதல் இந்து பஜார், வார்டு எண்.5 நான்கு பங்களா முதல் வார்டு எண்.1 கிழக்கு நாடார் தெரு வரை பேவர்கல் சாலை பதிக்கும் பணி. | 1.550 | 100.00 |
| 2 | **சிப்பம்–2 (Package-II)**<br>வார்டு எண்.11 பழைய பேருந்து நிலையம் முதல் வார்டு எண்.13 சங்குவெட்டி தெரு வரை, வார்டு எண்.12 நடுத் தெரு முதல் வார்டு எண்.11 ஜின்னா தெரு வரை, வார்டு எண்.12 கருப்பட்டிக்காரத் தெரு மற்றும் ஒடக்கரைப்பள்ளி முன்புறம் ,வார்டு எண்.19 மற்றும் 20 வடக்கு பகுதிகள், வார்டு எண்.20 காலவாசல் சந்து மற்றும் சி.ஐ.எஸ் சர்ச் பின்புறம், வார்டு எண்.15 பன்னாட்டர் தெரு, மேலத்தெரு பள்ளிவாசல் முதல் கோல்டன் பீச் சாலை வரை, மற்றும் கடற்கரை சர்ச் முதல் மேலத் தெரு வரை. வார்டு எண்.2 அன்புநகர் இரண்டு குறுக்கு தெரு, இந்துக்கள் மயான கிழக்கு பகுதியிலிருந்து மேற்கு பக்கம் வரை. வார்டு எண்.4 பாத்திமாக்காலனி தெருக்களில் பேவர்கல் சாலை பதிக்கும் பணி. | 3.550 | 200.00 |
| | **மொத்தம்** | **5.100** | **300.00** |

**(கோப்பு எண்.இ1 /326 / 2018)**

**அலுவலக குறிப்பு**

மதிப்பீடு ரூ. 300.00 இலட்சத்திற்கு (TURIP மானியம்: 1.38 இலட்சம் + மாநில நிதிகுழு/மத்திய நிதிகுழு மானியம்: 0.90 இலட்சம் + மாநில நிதிகுழு மானிய ஊக்க நிதி: 0.42 இலட்சம் + நகராட்சி பங்களிப்பு: 0.30 இலட்சம்) அனுமதிக்க வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.398** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 2</u>**

இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018–2019–ம் நிதியாண்டில் கீழக்கரை இந்து பஜாரில் LED தெருவிளக்குகள் ரூ 4.90 லட்சத்திற்கு அமைக்கும் பணி செய்வதற்கு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சர், அவர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் அவர்களின் ந.க.எண் : ஆர்4/3770/2018 நாள்26.06.2018–ந் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முன் வைக்கப்படுகிறது மேற்காணும் பணிக்கு 29.06.2018–ந் தேதி விலைப்புள்ளிபட்டியல் பெற்று பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 696/இ1/2018)**

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட இந்து பஜாரில் 10மீட்டர் உயரமுள்ள மின்சேமிப்பு விளக்குகள் 150wLED தெருமின்விளக்கு 6 எண்ணம் கொண்டது அமைத்தல் | 4,90,000/– |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் அவர்களின் ந.க.எண் : ஆர்4/3770/2018 நாள்26.06.2018 –ந் தேதிய கடிதத்தை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018–2019–ம் நிதியாண்டில் கீழக்கரை இந்து பஜாரில் 10மீட்டர் உயரமுள்ள மின்சேமிப்பு விளக்குகள் அமைக்கும் ரூ 4.90 லட்சம் மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.399</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

இந்நகராட்சி பொதுசுகாதார உபயோகத்திற்கு பயன்படுத்தி வரும் மூன்று சக்கர சைக்கிள்களில் (Tricycle) 27–எண்ணம் பழுதடைந்து தற்போது உபயோகத்திற்கு பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளதால் இந்நகர் பகுதிகளில் வீடு வீடாக சென்று குப்பை வாங்கி சேகரிக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி பழுதடைந்த மூன்று சக்கர சைக்கிள்களை (Tricycle) பழுதுநீக்கம் செய்ய துப்புரவு ஆய்வாளர் (பொ) அவர்களால் கோரப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகளை பொதுசுகாதார அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ளும் பொருட்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.4,35,000/– ஆகும் என்று பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**<u>(கோப்பு எண். 619/இ1/2018)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. பொதுசுகாதார அவசிய அவசரம் கருதி இப்பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் ரூ.4,35,000/– மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மூன்று சக்கர சைக்கிள்களில் (Tricycle) பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.400** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

கீழக்கரை நகராட்சியில் 01.10.2018–ல் இருந்து தொழில் வரி மறுசீராய்வு செய்யப்பட்ட விபரத்தை பொதுமக்கள் அறியும் வண்ணம் தினசரி நாளிதழில் கடந்த 20.06.2018 அன்று விளம்பரம் செய்ததற்கு தினத்தந்தி, மதுரை பில் பட்டியல் எண்: MDU18190007838 நாள்: 29.06.2018– ன் படி ரூ.18,711/– ற்கு வரப்பெற்றுள்ளது. மேற்காணும் தொகை வழஙக மன்றஅனுமதி வேண்டப்படுகிறது

**(கோப்பு எண்.இ2 /591 /2018)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்காணும் பட்டியல் தொகை ரூ.18,711/– ஐ தினத்தந்தி, மதுரை நிறுவனத்திற்கு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.401** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 5**

கீழக்கரை நகராட்சிக்குப்பட்ட 21 வார்டுகளிலும் புதியகுடிநீர் இணைப்புகள் வழஙகுவதற்கான நகராட்சிகள் குடிநீர் உபவிதிகளுக்குட்பட்டு, இந்நகராட்சியில் புதியகுடிநீர் இணைப்பிற்கான சாலைதொண்டும் கூலி (Road Restoration Fees) 10 % திருத்தியமைக்கப்பட்டு உயர்த்திட 01.07.2018 முதல் 31.03.2019 வரை) வசூல் செய்திட இந்நகர்மன்ற தீர்மான அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | சாலை விபரம் | தற்போது உள்ள தொகை | உயர்த்திய சதவீதம் | திருத்தியமைக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | B.T சாலை | 5808 | 10% | 6389/– |
| 2 | CC சாலை | 6557 | 10% | 7224/– |
| 3 | Earth சாலை | 3516 | 10% | 3868/– |

**(கோப்பு எண்.இ2 /591 /2018)**

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.402** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி